பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 06 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஜார்கண்ட், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களுக்கு இரண்டு ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிக்குள் இறுதி செய்யப்பட்டுவிடும் என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

- நாட்டின் முதலாவது சர்வதேச மீன்வள தொழில்நுட்பக் கண்காட்சி இன்று மும்பையில் தொடங்குகிறது.

- சீனாவுடனான புதிய வர்த்தக ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

- இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஜார்கண்ட், கர்நாடகா, ஆந்திர ஆகிய மாநிலங்களில் இரண்டு ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, அப்பிராந்தியத்தில் போக்குவரத்தை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இம்மாநிலங்களுக்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் 6 ஆயிரத்து 405 கோடி ரூபாய் செலவில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது குறித்து குறிப்பிட்ட அவர், அப்பகுதிகளில் வர்த்தகத்தை மேம்படுத்தும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

தில்லி பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தில்லி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவும், இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாக திரு. மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிக்குள் இறுதி செய்யப்பட்டுவிடும் என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ஐரோப்பிய யூனியனுடனான நட்புறவுக்கு இந்தியா முன்னுரிமை அளிப்பதாக கூறினார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகள் ஆக்கப்பூர்வமாக நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான மோதலுக்கு பேச்சுகள் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் முதலாவது சர்வதேச மீன்வள தொழில்நுட்பக் கண்காட்சி இன்று மும்பையில் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியை மகாராஷ்டிர மாநில துறைமுக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. நிதிஷ் நாராயண் ரானே தொடங்கி வைக்கிறார்.

மீன் வளர்ப்பில் புதுமைக் கண்டுபிடிப்புகள், மீன்பிடித்தல், கடல் உணவு பதப்படுத்துதல், சரக்குப் போக்குவரத்தில் செயற்கை நுண்ணறிவு, சரக்குகளை அனுப்புதல், தூய்மைத் தொழில்நுட்பம் ஆகியவை குறித்து இக்கண்காட்சியில் எடுத்துரைக்கப்பட உள்ளது.

<<<<>>>>

இலங்கை ராணுவ தளபதி லெஃப்டினென்ட் ஜெனரல் Lasanta Rotrigo நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

நேற்று அவர் ராணுவ துணைத் தளபதி லெஃப்டினென்ட் ஜெனரல் ராஜா சுப்பிரமணியத்தை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தினார்.

அப்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு, பிராந்திய பாதுகாப்பு குறித்து இருவரும் விவாதித்தனர்.

அவரது பயணத்தின்போது இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்தவும்த, புதிய வாய்ப்புகள் குறித்து விவாதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ராணுவப் பயிற்சி, திறன் மேம்பாடு ஆகியவற்றில் இரு நாடுகளுக்கு இடையே உள்ள ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

குஜராத்தில் இருந்து தமிழகத்தின் தூத்துக்குடிக்கு 35 ஆயிரம் டன் உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

உப்பு நகரமான தூத்துக்குடியில் கோடை மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Lakshmanan – 57 Sec)

<<<<>>>>

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தின்கீழ் மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இன்று விவசாயிகளுடன் கலந்துரையாடுகிறார்.

குஜராத்தின் பர்தோலியில் நடைபெறும் நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேலும் கலந்துகொள்கிறார்.

அப்போது விவசாயிகள் எதிர்கொள்ளும் வேளாண் தொடர்பான சிரமங்கள் குறித்து அவர் கேட்டறிகிறார்.

நாடு முழுவதும் 16 ஆயிரம் விஞ்ஞானிகளைக் கொண்ட 2 ஆயிரத்து 170 குழுக்களும் காணொலிக் காட்சி வாயிலாக இந்த நிகழ்ச்சியில் இணைய உள்ளனர்.

<<<<>>>>

ரயில் தட்கல் முன்பதிவு பயணச்சீட்டுகள் தொடர்பாக சில அறிவிப்புகளை ரயில்வே வெளியிட்டுள்ளது.

அதன்படி ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மற்றும் செயலியில் அடுத்த மாதம் முதல் ஆதார் அங்கீகாரம் பெற்ற பயனர்கள் மட்டுமே தட்கல் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த மாதம் 15ஆம் தேதி முதல் ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் தட்கல் முன்பதிவு பயணச்சீட்டுகளுக்கு ஆதார் அடிப்படையிலான ஓ.டி.பி. எண் அங்கீகாரம் கட்டமாயமாக்கப்பட்டுள்ளது.

தட்கல் முன்பதிவு தொடங்கிய அரை மணி நேரத்திற்குப் பிறகே அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய முடியும் என்றும் கூறியுள்ளது.

தட்கல் முன்பதிவில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருவதற்கும், பயணிகள் உரிய முறையில் பயணச்சீட்டுகளைப் பெறும் வகையிலும் இத்தகைய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

சீனாவுடனான புதிய வர்த்தக ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற பேச்சுகளுக்குப் பின் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்

இந்த வர்த்தக ஒப்பந்தத்தின்டி அரிய கனிமவளங்களை சீனா, அமெரிக்காவுக்கு விநியோகம் செய்ய உள்ளது.

சீன மாணவர்களுக்கு அமெரிக்கா விசா வழங்க உள்ளது.

சீன அதிபர் திரு. ஜீ ஜின்பிங்-கின் இறுதி ஒப்புதலுக்குப் பிறகே இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று கூறியுள்ளார்.

சீனா – அமெரிக்கா இடையேயான நட்புறவு ஆரோக்கியமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சீனா தற்போது விதிக்கப்படும் 10 சதவீத வரிமுறை தொடரும் என்று கூறியுள்ளார்.

அதேபோல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து 55 சதவீத வரியை விதிக்கும் என்றும் திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தைவானின் கிழக்குப் பகுதியில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி 4ஆக பதிவானது.

Hualien கடலோரப் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், சேதம் குறித்த தகவல் ஏதுமில்லை என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா மற்றும் மாஹே பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், பீஹார், ஆந்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், தெலங்கானா, உத்தராகண்ட் மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தமிழகத்தில் இன்று 7 மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோவை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

<<<<>>>>

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் Liandro Riedi - ஜப்பானின் Yosuki Watanuki இணையை வென்றது.

-------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஆட்டத்தில் அர்ஜென்டினா 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று மீண்டும் அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

-------------

கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் அணிகள் அதைக் கொண்டாடுவதற்கான புதிய விதிமுறைகள் குறித்து விவாதிப்பதற்கான கூட்டத்திற்கு பி.சி.சி.ஐ. நாளை மறுநாள் ஏற்பாடு செய்துள்ளது

அண்மையில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்த நிலையில், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் கோவை அணியை வென்றது.

கோவையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட்செய்த கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 169 ரன் எடுத்தது.

170 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மதுரை அணி 17 புள்ளி 5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 171 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<The End>>>>